**<u>சாட்சிகளின் வாக்குமூலம்.</u>**

<u>பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 ( I) உ.வி.மு.ச. பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.</u>

**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.82/2022</u>**

| | | | | |
|---|---|---|---|---|
| வாக்குமூலம் | - **வா.சா.1** | தொடங்கும் நேரம் | : | 5.17 p.m. |
| | | முடிவுறும் நேரம் | : | 5.23 p.m. |

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : **வள்ளியம்மாள்** | மதம் | : | -- |
| த/பெ. | : **சுப்பிரமணி** | தொழில் | : | -- |
| கிராமம் | : **கீழ்பாக்கம்** | வயது | : | **74** |
| தாலுக்கா | : **வந்தவாசி** | நாள் | : | **28.04.2026.** |

1987ஆம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு **ஏப்ரல் திங்கள் 28**ஆம் நாள் சாட்சியம்.

**<u>கூடுதல் முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 1ஆம் வாதியாவேன். ஏற்கனவே என் தரப்பில் என்னை வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு என் மூலம் **வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.11 வரையிலான** ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது என் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக மனு தாக்கல் செய்து, மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், என் தரப்பில் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படிக்க கேட்டு கையெழுத்து செய்தேன். மேற்படி ஆவணத்தை தற்போது என் தரப்பு ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| **01.** | **20.05.2022** | **தேதியிட்ட கீழ்கொடுங்காலூர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு - கை நகல்.** | **வா.த.சா.ஆ.12** |
| **02.** | **25.05.2022** | **தேதியிட்ட வந்தவாசி வட்டாட்சியர் அவர்களிடம் யுடிஆர் பட்டாவை ரத்து செய்ய அளித்த மனு - கை நகல்** | **வா.த.சா.ஆ.13** |
| **03.** | **06.06.2022** | **தேதியிட்ட திருவண்ணாமலை நில மோசடி பிரிவு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் அளித்த மனு - கை நகல்.** | **வா.த.சா.ஆ.14** |
| **04.** | **19.09.2022** | **தேதியிட்ட திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரிடம் அளித்த மனு - கை நகல்** | **வா.த.சா.ஆ.15** |

**05. 11.10.2022 தேதியிட்ட திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வா.த.சா.ஆ.16 வந்தவாசி வட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதத்தின் நகல்**

மேற்படி **வா.த.சா.ஆ.12 முதல் வா.த.சா.ஆ.16** வரையிலான ஆவணங்கள் என் தரப்பில் குறியீடு செய்யப்படுகின்றன. வா.த.சா.ஆ.12 முதல் வா.த.சா.ஆ.16 வரையிலான ஆவணங்கள ் பிரதிவாதிகள ் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாகும்படி வேண்டிக் கொள்கிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

ஒம்/- செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி